தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை

விலைமனுதாரர்களுக்கான அழைப்பு

சபையின் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அப்புறப்படுத்துதல்

சபையின் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அப்புறப்படுத்துவதற்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDB) சார்பாக திணைக்கள பெறுகைக் குழு (சிறிய) தலைவர் கோருகின்றார்.

விலைக்கோரல் இல.	:	T/05/2026
விலைமனுவின் பெயர்	:	சபையின் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அப்புறப்படுத்துதல்
விலைமனு ஆவணக் கட்டணம்	:	ரூ. 2,000.00 (மீளளிக்கப்பட்டாத கட்டணம்)
விலைக்கோரல் முடிவுறுத்தல் நேரம்	:	2026-11-18 மு.ப. 11.30 மணிக்கு
விலைக்கோரல் பிணை முறித் தொகை	:	மொத்த விலைக்கோரல் பெறுமதியின் 1% இற்கு மேல் (விலைக்கோரல் பிணை முறித் தொகையை ஐனுடி தலைமை அலுவலகத்திற்குச் செலுத்த வேண்டும்)
ஆவணங்கள் வழங்கப்படும் இடம்	:	வழங்கல் பிரிவு - IDB தலைமை அலுவலகம்
விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் காலம்	:	2026-11-02ஆம் திகதி முதல் 2026-11-17ஆம் திகதி வரை மு.ப. 9:00 மணி முதல் பி.ப. 3:00 மணி வரை

1. அப்புறப்படுத்துவதற்காக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை 2026-11-02ஆம் திகதி 2026-11-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9:00 மணி முதல் பி.ப. 3:00 மணி வரை பின்வரும் முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம். எந்தவொரு ஆர்வமுள்ள நபரும் உருப்படிகளுக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விலைமனுதாரரின் ஆளடையாளத்தை சரிபார்ப்பதற்காக தேசிய அடையாள அட்டை (NIC) அல்லது அவரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வேறு ஏதேனும் செல்லுபடியாகும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

	நிலையம்	விசாரணை	முகவரி	தொலைபேசி இலக்கம்
i	தலைமை அலுவலகம் - அச்சிடல் பிரிவு	பிரதிப் பணிப்பாளர்	தொழில்முனைவோர் அபிவிருத்திப் பிரிவு (EDD), இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இல. 615, காலி வீதி, கட்டுபெத்த. மொரட்டுவ	011-2605326/7 Ext. 152, 338
ii	ATRDC நிலையம் - பன்னல	வதிவிடப் பணிப்பாளர்	ATRD நிலையம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, பன்னல	037-2246029
iii	Electro Plating Centre (EPC) – பேலியகொட	உதவிப் பணிப்பாளர்	Electro Plating Centre (EPC), இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இல. 33, புதிய நுகே வீதி, பேலியகொட.	011-2930736
iv	இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் (RPD&SC) - பேலியகொட	உதவிப் பணிப்பாளர்	RPD&S நிலையம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இல. 33, புதிய நுகே வீதி, பேலியகொட.	011-2942364

2. ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மொரட்டுவ, கட்டுபெத்த, இல. 615, காலி வீதி, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, உதவிப் பணிப்பாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2026-11-02ஆம் முதல் திகதி 2026-11-17ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களை பாரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனு ஆவணங்களை (இயந்திரங்கள் மற்றும் பரிசோதனை உபகரணங்களின் விவரக்குறிப்புகள் உட்பட) IDB இணையதளமான www.idb.gov.lk மற்றும் தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சின் இணையதளமான www.industry.gov.lk ஆகியவற்றில் பார்வையிடலாம் (பார்வையிடும் நோக்கத்திற்காக மட்டுமே).

   எவ்வாறாயினும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்ட அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணத்தையே கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும். தொடர்புகளுக்கு: 011-2607004 (உதவிப் பணிப்பாளர் - வழங்கல்) அல்லது 011-2605326, 7 (நீடிப்பு 148 - வழங்கல் பிரிவு).

3. ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றை கட்டுபெத்த IDB தலைமை அலுவலகத்தில் உள்ள வழங்கல் பிரிவின் உதவிப் பணிப்பாளரிடமிருந்து 2026-11-02ஆம் திகதி முதல் 2026-11-17ஆம் திகதி வரையில் (அரச வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

   3.1 ஒரு விலைமனுதாரர் விலைமனு ஆவணத்தை கொள்வனவு செய்ய வரும்போது, நிறுவனத்தின் பெயர், நிறுவனப் பதிவு இலக்கம், விலைக்கோரல் இலக்கம் மற்றும் விலைக்கோரலின் பெயர் ஆகியவற்றை உள்ளடக்கிய "நிறுவனக் கோரிக்கை கடிதத்தை" "தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (சிறிய)" அவர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

   மற்றும்

   3.2 விலைமனு ஆவணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன், விலைமனுதாரர் மேற்கூறிய மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். கட்டணம் ரொக்கப் பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை கட்டுபெத்த IDB தலைமை அலுவலகத்தில் உள்ள தலைவர் அலுவலகத்திற்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட வேண்டும் அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (சிறிய), இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, இல. 615, காலி வீதி, காட்டுபெத்த, மொரட்டுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்ட உடனேயே, IDB தலைமை அலுவலகத்தின் வழங்கல் பிரிவில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் இலக்கம் மற்றும் விலைக்கோரலின் பெயர் என்பன குறிப்பிடப்பட வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (சிறு),
இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை,
இல. 615, காலி வீதி, கட்டுபெத்த,
மொரட்டுவ.

தொலைபேசி / தொலைநகல் - 011-2607004